உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உச] அக்ஷய ௵ வைகாசி ௴ [பகுதி எ.

Vol. XXIV. *May-June-1926.* No. 7.

## பராந்தகன் I

### கி.பி. 907-948 க்கு சாலிவாகன சகம் 985-1026.

இராஜகேஸரி ஆதித்யசோழன் 880 முதல் இருபத்தேழு ஆண்டு ஆண்டபின் கி.பி. 907ல் இறந்தான். இவனது மூத்தமகனான பராந்தகன் சோழவரசனானான். இவனை மதிரைகொண்ட பரகேசரிஎன்று கல்வெட்டுக்கள்கூறும். இப்படிக்கூறக்காரணம் இவனது அரசாட்சியின் மூன்றாவதுஆண்டில் (1) பாண்டியநாட்டையாண்ட மானாபரணபாண்டியனோடுபொருது அவனது இராச்சியத்தை ஜயித்து அவனுக்குத்திருப்பிக் கொடுத்தானென்பதாலென்றுதெரிகிறது. அதுமுதல் தன்னை மதிரைகொண்ட கோபரகேஸரிஎன்று கூறிக்கொள்ளுகிறான். இவனது எட்டாவது ஆண்டில் மானாபரணன்தேவி கிழவன் தேசப்புகழ் என்பாள் திருநெய்த்தானத்து மஹாதேவர்க்கு ஒரு நொந்தாவிளக்கிட்டமையால் (2)

---

(1) No 29 of 1907 (2) தில்லைஸ்தானம் பெரியகோயில் மகாமண்டபம் தென்புறத்திற்காணப்படும் கல்வெட்டு பின்வருமாறு:—

ஸ்வஸ்திஸ்ரீகோபரகேஸரிபன்மர்க்கு யாண்டு அ-வது திருநெய்த்தானத்து மஹாதேவர்க்குப்பாண்டியனார்மானாபரணன் தேவியார் கிழவன்தேசப்புகழ் சந்திராதித்தவல் சதம் உழக்கு நெய் ஒரு நொந்தாவிளக்கெரிப்பதற்கு வைத்த பொன் ௩௰ இப்பொன் முப்பதுகழஞ்சையுங் கொண்டு நிசதி உழக்குநெய் சந்திராதித்தவல் அட்டுவேனாவேன்.

சோழனும் பாண்டியனும் நட்புரிமைபூண்டு வாழ்ந்தனர் என்று தெரிகிறது. அவ்வாறு இவன் பாண்டியர்களோடு சமாதானமாகவே பன்னிரண்டாம்ஆண்டுவரையில் வாழ்ந்துவந்தான. பின்னரே அவர்களை வேளூரில் தோற்கடித்தான். இககாலத்தில் பாண்டியன மாறுபரணன இறந்து இராஜசிம்மன பாண்டிய அரசனுயிருந்தான். இவன் தன்னோடு சிங்கள அரசனையும் சேர்த்துககொண்டு எதிர்க்க இவர்களிருவரையும் தோற்கடித்து சங்கிராமராகவன் என்னும் பட்டத்தையும் ஏற்றானென்று பிருதிவீபதிப்பட்டயம் கூறுகிறது. இப்பட்டத்தை இவன் கொண்டபோதிலும் இவனது மெய்க்கீர்த்திகளில் மதிரையுங் ஈழமுங்கொண்ட பரகேஸரிஎன்று கூறிக்கொள்வது ஈழத்தை இவன் கி.பி. 941-ல்ஜயித்த பிறகேயாம்.

இவன் தனது தகப்பனை ஆதித்தன் பிடித்த தொண்டைநாட்டை விட்டுவிடாது ஆண்டுவந்தான். இவைகளோடுநிற்காமல் கொங்குநாடு சென்று அப்பக்கத்திலாண்ட கங்கஅரசனை இரண்டாம்பிருதிவீபதியை ஜயித்து, அவனைத்தனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசனாக்கி, அவனுக்கு வாணதிராயன் எனனும்பட்டமும் அளித்தானென்று பிருதிவீபதிப்பட்டயங்கள் (3) கூறுகின்றன இச்செப்புப்பட்டயம் பராந்தகனது பதினைந்தாமாண்டிற் பிறந்தது. இதற்கேற்ப இச்சோழ அரசனது கல்வெட்டுக்களும் அப்பக்கங்களில்காணப்படுகின்றன. இதனால் பாண்டிநாட்டைச் சயித்த சிலஆண்டுகட்குள்ளாகவே கங்கநாட்டையும் தன்னடிப்படுத்திக்கொண்டான்என்பது தேற்றம்.

வடஆற்காடு ஜில்லாவில் ஒருபாகத்திற்கும் அதேபாகத்திலுள்ள தென்னாற்காடுஜில்லாவின்பாகத்திற்கும் வாணகப்பாடி அல்லது வடுகவழி மேற்கு என்றுபெயர். இந்நாட்டை இக்காலத்தில்நாலாம்விஜயாதித்தனும், அவனுக்குமுன் அவனது தந்தை வித்தியாதரனும் ஆண்டுவந்தார்கள். இந்நாட்டையும் ஜயித்து, இதனையும் தன் சிநேகனும், தன் கீழ்ச் சிற்றரசனுமான கங்கவமிசத்தான் பிருதிவீபதிக்குக் கொடுத்தான்.

சென்னைமாகாணத்தில் சற்றேறக்குறையச் சரிபாதியைத் தன் வசப்படுத்திக்கொண்டதைக்கண்ட இராஷ்டிரகூட அரசர்கள் மிகுதி

3. S. I. I. Vol II part III.

யிருந்த கங்கவமிசத்தாரோடு பெண்கொடுக்கல்வாங்கல் செய்து உறவை யும் ஒற்றுமையையும் பலப்படுத்திக்கொண்டனர்.

கி.பி. 937-ல் இராஷ்டிரகூட பட்டத்துக்கு அமோகவர்ஷன் மகன் அகாலவர்ஷனென்னும் மூன்றாங்கிருஷ்ணன்வந்தான். இவன் சிறுவ னுயும் தைரியசாலியாயுமிருந்ததோடு பராந்தகனது செங்கோல் வளம் பெறுவதைக்காணப்பொறுதவனுய், தனது சேனைகளைத்திரட்டிக்கொண்டு கி.பி. 942-ல் தொண்டைமண்டலத்தில் பிரவேசித்தான். அக்காலத்தில் பராந்தகன் தெனுட்டிலிருந்தபடியால் உள்நுழைந்தவனைத் தடுக்கத் தகுதியுடையார் ஒருவருமில்லை. இவன் காஞ்சிபுரம் முதல் வடஆற் காடுஜில்லாவிலுள்ள சித்தலிங்கமடம்வரைபிற் பரவினுன். இதைக் கேட்ட பராந்தகன் வடக்கேவந்து மூன்றாங்கிருஷ்ணனைத் தோற் கடித்து வீரசோழனென்னும் பட்டமும் சூடினுன். இதனைக் கன்னி யாகுமரிக் கல்வெட்டு பின்வருமாறுகூறும்.

யஜ்ஞாய விஜயொவ ஜெ்ட்ரதிஃ க்ருஷ்ணராஜஜித ம் நராதிபெவெஃ
ஹஸிவிக்ரவிவயிர்தஜெ்ட்ரதஃவீரசொலஇதிகதநகீதுர்தெ

[இதன் பொருளாவது; அரசர்களால் வெற்றிபெறமுடியாத (பராக்கிரம முடைய) கிருஷ்ணராஜனை அர்ச்சுனனுக்குச் சமானமான காந்தியுடையவனும் அநேக வீரச்செயல்களால் கீர்த்தி (பெருமை) யடைந்தவனுமான பராந்தகன் ஜயித்ததினுலே வீரசோழன் என்று பேர்பெற்ருன்].

மூன்றாங்கிருஷ்ணனுன கன்னரதேவன் தொண்டைமண்டலத்தில் நுழைந்ததற்கு ஆதாரமாக, சித்தலிங்கமடம என்ற ஊரில் அவனது ஐந்தாம்ஆண்டுக் கல்வெட்டொன்று சிதைந்து புதுப்பிக்கப்பட்டிருக் கிறது. இக்கல்வெட்டு இராவிடன் கன்னியாகுமரிக்கல்வெட்டிற்கண்ட சுலோகத்துக்குப் பொருள் செவ்வனே விளங்காது. இதனுல கன்னர தேவன் சோழராச்சியத்திற்புகுந்தானென்பதும் பராந்தகனுல் விரட்டப் பட்டானென்பதும் வெளிப்படை.

இவ்வாறுகொள்ளாது பராந்தகன் தனது ஆட்சியிறுதிக்காலத்தே தனது அரசாட்சி முப்பத்தைந்தாம ஆண்டில வலிகுன்றியிருந்தா னென்றும் அதற்கு இக்கன்னரதேவனது படையெடுப்பே போதிய சான்றென்றும் கூறுவர். இதற்குக் காட்டாய்நிற்பது சித்தலிங்கமடத் திற் காணப்படும் கன்னரதேவனது ஒரேகல்வெட்டேயாம். ஆனுல்

நாலைந்து தலைமுறைக்குப்பின்னெழுந்த கன்னியாகுமரிக்கல்வெட்டு கன்னரதேவனது படையெடுப்பையும் அவனது தோல்வியையும் கூறுகிறது. படையெடுப்பையொப்புக்கொள்ளுகிறவர் அவனது தோல்வியையும் ஒப்புக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கின்றனர். இதுவன்றிப் பராந்தகன் தனது இராச்சியத்தை இழக்க, கன்னரதேவன் தொண்டைமண்டலத்தைத் தன்னதாக்கிக்கொண்டிருந்தால் கன்னரதேவன் கல்வெட்டுக்கள் இவனது ஐந்தாவது ஆண்டுமுதல் அந்நாட்டில் காணப்படல்வேண்டும். அதற்குமாருக இவனது பதினாலாவது ஆண்டுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்களே ஆண்டுக்காணப்படுகின்றன. இதுமாத்திரமல்ல பராந்தகதேவனான சோழபெருமானடிகள் தொண்டைநாட்டையிழந்திருப்பானானால் இப்போ நடந்த இவனது முப்பத்தைந்தாண்டிற்கு மேற்பட்டகல்வெட்டுக்கள் ஆங்குக்காணப்படமாட்டா. வடஆற்காடு ஜில்லாவிலுள்ள ஜம்பை, எலவானசூர், கிராமம் திருமால்புறம் என்ற ஊர்களில் பராந்தகனது முப்பத்தைந்தாண்டுகட்கு மேற்பட்ட ஆண்டுக் கல்வெட்டுக்கள் ஏராளமாகக்காணப்படுகின்றன. இவைகள் கி.பி. 942 முதல் 948 வரையிலாகும். அதேஊர்களிலிருக்கும் கன்னரதேவனது சாசனங்கள் 23 முதல் 28 ஆண்டு வரையிலுமாக, கி.பி. 960 முதல் 968 வரையிலாகின்றன.

கன்னரதேவன் சோழப்பராந்தகப்பெருமானடிகளால் துரத்தப்பட்டானென்பதற்கு மற்றொரு இலக்காய்நிற்பது "சக்கரவர்த்தி கன்னரதேவவல்லபர் ஆண்டு இரண்டாவது; சகராண்டு எண்ணூற்றெழுபத்தொன்று, இராஜாதித்யதேவரைக் கிழித்து (கொன்று) தொண்டைமண்டலத்தில் பிரவேசித்தகாலம்" என்னும் சோழபுரக்கல்வெட்டு. இதனாலே இதற்குமுன்பு இவர் தொண்டைநாட்டின்மேல் படையெடுத்தனராயினும் தங்கவில்லையென்பது விளக்கமாகும். இதுபற்றி அடுத்த அதிகாரத்தில் கூறப்படும்.

இவ்வாறு பராந்தகன் மூன்றாங் கிருஷ்ணனான கன்னரதேவனை வெருட்டிய பின்பு, மறுபடியும் பாண்டியன் முனைக்கவே, அவனை மறுபடியும் தோற்கடித்தான். இந்தப்போரில் இவனுக்கு உதவிபுரிந்த ஈழத்தரசனான ஐந்தாந்தப்புலனை அடக்கவெண்ணி ஈழத்தின்மேற் படையெடுத்துச் சென்றான். ஏழேனாளையில் எழுநூற்றுக்காவதப்பரப்பையுடைய சிங்கள

நாட்டைத் தன்னடிப்படுத்தி அநேகவேழங்களைத் திறையாகப்பெற்று னென்று உலாக்கள் கூறுகின்றன. இவ்விதமாக ஈழநாட்டைத் தன்னடிப்படுத்தியபின்புதான் இவன் தனது மெய்க்கீர்த்திகளில் 'மதிரையும் ஈழமுங்கொண்ட பரகேசரி' என்று கூறிக்கொள்ளுகிறுன். இவைகள் இவனது ஆட்சியாண்டு முப்பத்தேழுக்குமேலேயே காணப்படுகின்றன. ஆகவே இவனது ஈழப்படையெடுப்பு முப்பத்தேழாவது ஆண்டான கி. பி. 944 ஆகும்.

இவ்வைந்தாம் தப்புலன் செய்தகுற்றம் பாண்டியனுக்கு உதவி புரிந்ததென்று சொன்னோம். இதனைத் திருவாலங்காட்டுப் பட்டயம் 51-வது சுலோகம் "பாண்டியன் சோழனது சினத்தீ தணியும்வண்ணம் தனது பரம்பரையான நாட்டைவிட்டுக் கடலிற்புகுந்தான்." என்று கூறுகிறது. "இந்தக்காலத்தில் [தப்புலன் V கி. பி. 940—952] பாண்டியன் சோழர்கட்குப் பயந்து தன்னுட்டைத்துறந்து மரக்கலமிவர்ந்துசென்று மகோததியில் இறங்கினான். அரசன் அவனை வரவேற்று வேண்டியனவெல்லாங்கொடுத்து நகருக்குப் புறத்தே வாழும்படி வேண்டுவனபுரிந்தான். இலங்கையதிபன் இனிச் சோழரோடுபோரிட்டுச் சில துறைமுகங்களைப் பிடித்துப் பாண்டியனுக்கு அளிப்பேன் என்று சூளுரைத்துச் சேனைகளைத்திரட்டிக்கொண்டிருக்கையில் இவன் சோழனுல் தோற்கடிக்கப்பட்டான்" என்று இலங்கைச்சரித்திரமான மகாவமிசம் கூறுகிறது. 'முன்னொருக்கால்படைத்தற்கடவுளான திருநெடுமாலே இராமமூர்த்திகளாய்த் தோன்றி இலங்கையை யழித்ததற்கொப்ப இவனும் இலங்கையையழித்ததால் சங்கிராமராகவன் என்ற பட்டம்புனைந்தான்' என்று செப்பேடுகள் கூறுகின்றன.

இவனது தண்டத்தலைவனொருவனான சேம்பியன்சோழவரையன் வடக்கே நெல்லூர்வரையிற்சென்று இவனது அரசியலை நிலைநிறுத்தி வந்தானென்று திரு ஒற்றியூர்க்கல்வெட்டா லறிகிறோம். ஆகவே இவனது இராச்சியம் வடக்கே நெல்லூர்முதல் தெற்கே கன்னியாகுமரிவரையிலும் மேற்கில் இராஷ்டிரகூட எல்லைவரையிலும் பரவியிருந்தது. பராந்தகன் இவ்விதமாக மிகப்பெருமையோடுஞ் சிறப்போடும் நாற்பத்தொரு ஆண்டு அரசாண்டான். சிலர் இதற்கு மாறுக இவன் சகூ யாண்டு ஆண்டானென்றும் அதற்குச்சான்று இவனது சகூ-ம் ஆண்டுக்கல்வெட்

டொன்று காணப்படுவதென்பர். இவன் கி. பி. 907-க்குச் சகம் அ௩௨௯-ல் சிங்காதனமேறினான். இவன் ௪௬ யாண்டு ஆண்டிருந்தால் அது கி. பி. 953-ல் செல்லும். கி. பி. 947-948-ல் அதாவது சகம் அ௬௯-ல் கன்னாதேவன் இராஜாதித்யனோடுபோரிட்டு அவனைக்கொன்று சோழமண்டலத்தில் நுழைந்தானென்று சோழபுரம் கல்வெட்டாற்றெரிவதாக முன்னர்க் காட்டப்பட்டிருப்பதாலும், கன்னியாகுமரிக் கல்வெட்டினாலும் அறியலாவதோடு பின்னர் சாட்சிகளுக்கும் இடர்ப்படுகின்றது. திருவிடைமருதூர் கற்குடி[5] முதலியவிடங்களிலுள்ள கல்வெட்டுக்களால் கண்டராதித்தேவரது மகனான உத்தமசோழரென்னும் மதுராந்தக தேவர் கலி ௪௦௭௦ (4070)ல் சோழசக்கரவர்த்தியானார் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது ஆங்கில ஆண்டு (4070—3101) 969—970 ஆகும். கி. பி. 971-ல் இரண்டாம் பராந்தகதேவரென்னும் சுந்தர சோழர் இறந்தார். இவர் பதினேழியாண்டு அரசாண்டதாகக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். அங்ஙனமாயின் இது (971—17) 954—955 வரை தள்ளும். கண்டராதித்ததேவர் எட்டாண்டு ஆண்டதாகக் கல்வெட்டுக்களால் நிச்சயமாகிறது. ஆகவே, இவர் 948-ல் பட்டத்திற்கு வந்திருக்கவேண்டும். அக்காலந்துத்தான முதலாம் பராந்தகதேவரான இவர் காலமாயிருக்கவேண்டும். 953-வரை அரசாண்டனராயின கண்டராதித்தர் சுந்திரசோழரது ஆண்டுகளான 8+17=25 ஆண்டுகள் கி பி 978 வரை நம்மை இழுத்துச்செல்ல, மதுராந்தகரது நடுவாட்சியிற் கலந்து இடற்பாடடைவோம், இது பொருந்தாமை காண்க.

பராந்தகனுக்குக் கன்னாதேவனைச் சயித்ததால் வீரசோழனென்ற பெயரும், இலங்கையைக் கீழ்ப்படுத்தியபிறகு சங்கிரராமராகவனென்னும் பட்டங்களுண்டாயினவென்றோம். இவனுக்கு இவைகளைத்தவிர வீரநாராயணனென்று ஒரு பேருமு உண்டு. இவன சேர அரசன் விஜயராகவன் மகளைப் பட்டமகிஷியாக உடையானென்றும், அவளுக்குக் கோக்கிழானடிகள் என்று பெயர் என்றும் உதயேந்திரத்துச் செப்பேட்டாற் றெரிகிறது இவளைத்தவிர்த்து இவன் நீறன் ஆலப்பாடியார்மகளை வதுவைசெய்துகொண்டான். அவளுக்கு வளவன்மாதேவி

5. உய்யக்கொண்டான் திருமலை-தேவாரமபெற்ற சிவதலம். திருச்சிராப்பள்ளிக்குமேற்கில் இரண்டு மைலிலுள்ளது.

யார் என்றுபெயர்[6]. மூள்ளூர் நங்கையின் பெண்ணான தென்னவன் மாதேவி என்னும் பேருடைய மல்லந்தவனடிப்பிராட்டியார் என்று ஒரு தேவியுண்டு. இவருக்கு நாராயணநங்கையாரென்றும் பேர்.[7]

பராந்தகதேவருக்குசேரன்மகளார்வயிற்றிற்பிறந்த இராஜாதித்யனைத் தவிர கண்டராதித்தன், அரிஞ்செயன், உத்தமசீலி, அரிகுலகேசரி என ஐவர் மக்களுண்டு[8]. இவர்களுள் உத்தமசீலியும் அரிகுலகேசரியும் இளவரசர்களாகவே தண்டநாயகர்களாகவும் இருந்து இறந்தனர்.

மூத்தவனான இராஜாதித்தன் தொண்டைநாட்டுக்கு அரசப்பிரதிநிதியாகத் திருநாவலூரில் தண்டுடன் தங்கியிருந்தான். (187 of 06) அரசன் தனது இராச்சியத்தைப் பிரித்துத் தனதுமக்களைக்கொண்டு சண்காணித்துவந்தானென்று சொல்லக்கூடிய பல வாதாரங்களுள.

---

(6) திருஐயாறு ஐயாறப்பர் சந்நிதி மகாமண்டபம் கீழ்புறம் தெற்குவாசல் வெளிவந்து மேல்புறம் செகதற்சுவருக்கு அடுத்தபத்தி:— மதிரைகொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு 30 ஆவது திருவையாற்றுக்குடைய மகாதேவர்க்கு சந்திராதித்தவல் நிசதிநெய்யாலிரவும்பகலும் எரிவதற்கு நீறனைலப் பாடியார் மகளார் சோழப்பெருமானடிகள் தேவினாயார்வளவன்மாதேவியார் வைத்தபொன் நயஉ இவரே வைத்த வெள்ளி விளக்கு.
இதனை நோக்காது 1910 ஆண்டுக் கலவெட்டறிக்கை 37-வது இலக்கத்தில் திருக்கருகாவூர் என்னும் திருக்களாவூர் கல்வெட்டொன்றில் கண்டவ......வன் என்பதை வில்லவன் என்று பூர்த்திசெய்துகொண்டது பொருந்தாமை காண்க.

(7) திருப்பழனமுடையார் கர்ப்பக்கிருகம் தென்புறம்:— ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்குயாண்டு மூன்றுவது திருப்பழனத்து மகாதேவர்க்கு சோழப்பெருமானடிகள் பரகேசரிபன்மர் தேவியார், சோழமாதேவியார்தாயார் மூள்ளூர்நங்கையார் இரவும்பகலும் நொந்தா விளக்கு ச(ந்திரா)தித்தவல் எரிவதற்கு

தில்லஸ்தானம் கர்ப்பக்கிருகம், தென்புறம்:—ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரிவன்மர்க்குயாண்டு நயசு-ஆவது திருநெய்த்தானத்து மகாதேவிக்குச்சோழப்பெருமானடிகள் மகாதேவியாரான நாராயணநங்கையார் சந்திராதித்தவல் இரவும் பகலும் ஒருநொந்தாவிளக்கு நிசதம் உழக்குநெய்......திருப்பழனத்துக் கல்வெட்டில் சோழமாதேவி என்று காணப்படுவது பொதுப்பெயர் என்றுகொள்க. மேற்காட்டிய கல்வெட்டின்கீழ் இவளது தாயார் மூள்ளூர்நங்கையின் கல்வெட்டுமிருக்கிறது. 8 கல்வெட்டறிக்கை 1909ம் ஆண்டு.

இவன் சைவனாகவே தில்லைத்திருமன்றத்தைப் பொன்வேய்ந்தா னென்று திருவாலங்காட்டுச்செப்பேடு 53-வது சுலோகம் கூறுகிறது. கலிங்கத்துப்பரணியும் ஆனைமங்கலத்துப் பட்டயமும் அவ்வாறே கூறுகின்றனவென்பர் சரித்திர ஆசிரியர் டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள்[9].

இவனைப்பற்றித் தமிழ்நூல்களிற் காணப்படுவன வருமாறு:—
கலிங்கத்துப்பரணி

9 Ancient India பக். 101.

வேழ மொன்றுதைத் தாவி விண்ணின்வாய்
விசைய டங்கவு மசைய வென்றதும்
ஈழ முந்தமிழ்க் கூட லுஞ்சிதைத்
திகல்க டந்ததோ ரிசைப ரந்ததும் vii உஅ.

நரபதியார்

தாழமுன் சென்று மதுரைத் தமிழ்ப்பதியு
மீழமுங் கொண்ட விகலாளி—குலோத்துங்கசோழனுலா.

எழுபகவில்

ஈழ மெழுநூற்றுக் காதமுஞ் சென்றெறிந்து
வேழந் திறைகொண்டு மீண்டகோன்—இராஜராஜதேவருலா.
'மதிரை கொண்ட கோப்பர கேஸரி'
'மதிரையும் ஈழமுங்கொண்ட கோப்பர கேஸரி'

என்பன மெய்க்கீர்த்திகள்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை

சோமசுந்தர தேசிகர்,
திருவாரூர்.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உஉ0-ம் பக்கத் தொடர்ச்சி.]

278. நாய கன்வனம் நண்ணலுற் றானென்றும்
மேய மண்இழந் தானென்றும் விம்மிலாள்,
நீவ ருந்தலை நீங்குவென் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுட விம்மினாள்.

இ-ள். (சீதை வருந்தினாள்; ஆனால் தன் பிராண) நாயகன் காட்டுக்குச் செல்லலுற்றானென்றும், (தசரதன் கொடுக்க, அவன்) அடைந்த பூமி (அரசாட்சி)யை யிழந்தானென்றும் வருந்தினாளில்லை: (வேறு எக்காரணம்பற்றி வருந்தினாளெனில்,) 'நீவருந்தாதொழி, நான் பிரிந்தேகுவேன்' என்ற கொடியசொல் செவியைச் சுட்டாற்போல வருத்த வருந்தினாள் (என்பது).

விம்மல்—வருந்தல். (விம்முறவு—வருத்தம்; சிந்தாமணி). வருந்தலை—வருந்துவாயல்லை—வருந்தாதே. 'விம்மிலாள்' நிற்கும் இடத்தில் 'விம்மலள்' என்றும் 'விம்மினாள்' நிற்கும் இடத்தில் 'தேம்புவாள்' என்றும் பாடங்கள் உண்டு.

279. துறந்து போம் எனச் சொற்ற சொல் தேறுமே,
உறைந்த பாற்கடற் சேக்கை உடன்ஓரீஇ,
அறம்தி றம்புமென் றையன் அயோத்தியிற்
பிறந்த பின்பும் பிரியல ளாயினாள்.

இ-ள். திருமால், (நா மிப்போது பூமியில் அவதாரஞ்செய்யாவிட்டால்,) தருமம் (நிலைகுலைவுற்று) மாறுபட்டுவிடுமென்று (திருவுள்ளங்கொண்டு திருமகளும் தானும்) வைகிய திருப்பாற்கடற் படுக்கையை விரைவில் நீங்கி (வந்து) அயோத்தியில் அவதரித்தபின்பு (முன்போலப் பிரியாதிருக்கும்பொருட்டே தானும் பூமியில் அவதரிப்பாளாய் மிதிலையிலே தோன்றி அவனை மணந்து) பிரியாளாயினாள் (ஆகிய சீதை, அவதாரநிமித்தம் முன்பு பிரிந்தது நியாயமே, இப்போது

பிரிதற்கு யாது நியாயமிருக்கின்றதென்றெண்ணி, அவன் தன்னை) விட்டுப்போவானென்ற சொல் (லுக்குப் பொருள் இன்னதென்று) தெளிந்தாளில்லை.

துறந்துபோம்-நீங்கிப்போவான். சொற்ற-சொன்ன. தேறும்-தெளிவாள். 'போம்' 'தேறும்' என்ற இரண்டும் செய்யுமென்முற்றுக்கள். 'தேறுமே' என்பதில் உள்ள ஏகாரம் எதிர்மறை. சேக்கை-படுக்கை. 'தேறுமோ' 'பிரிவிலள்' என்பனவும் பாடங்கள்.

கிடைத்த பிரதிகளெல்லாவற்றினும் 'துறந்துபோமென' என்ற பாடமே உள்ளது. இந்தப் பாடம் பொருட்சிறப்புடையதன்றென்பது தெளிவானது. இதற்கு இயன்ற அளவு பொருத்தமாகப் பொருள் கூறியிருக்கின்றேன்.

இஃது 'உள்ள' இடத்துத் 'துறந்து போவென்யான்' என்று பாடமிருப்பின் பொருள் சிறக்கும்: போவேன் என்று பொருள்படும் 'போதென' 'போகென' என்பவற்றுள் ஒன்று பாடமாயிருப்பின், அடுத்த படியாகப் பொருள் சிறக்கும். ஒருகால் இந்த இரண்டிலொன்று பூர்வ பாடமாயிருந்து, அது அருமையான பிரயோகமானதுபற்றி, அதன் பொருளறியாத எழுதுவோரால் 'போமென' என்று திரித்தெழுதப் பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் பழைய ஏடுகள் தேடிப்பார்த்து உண்மைப்பாடம் காணவேண்டிய இடங்களுள் இஃது ஒன்று. போம் என்பதற்குப் போவேன் என அச்சிடப்பட்டுள்ள ஒருபிரதியில் பொருள் எழுதப்பட்டிருக்கிறது: ஆயின், அதற்கு இலக்கணமாவது மேற்கோளாவது காட்டப்படவில்லை.

280. அன்ன தன்மையள், ஐயனும் அன்னையும்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே;
என்னை என்னை இருத்திஎன் றானென
உன்ன உன்ன உயிர் உமி ழாநின்றாள்.

இ-ள். அத்தன்மையுடையவளான சீதை, (என் நாயகன் நாட்டைத் துறக்கும்படியும் காட்டில் வசிக்கும்படியும்) தந்தையும் தாயும் பணித்தவைகளைச் செய்ய நிச்சயித்தது களங்கமற்றதே;

(என்னைப் பிரிவேனென்றது அவ்வாறு களங்கமற்றதன்று;) எப்படி என்னை (த் தன்னொடுவாராமல்) 'இருப்பாயாக' வென்றானென்று நினைக்க நினைக்க (வருத்தம் மிகுந்து) உயிரைப்போக்காநின்றாள் (ஒத்தாள்,.

சொன்ன—சொன்னவை. தூயது—களங்கமற்றது. என்னை-எப்படி. உன்ன உன்ன என்ற அடுக்கு விடாது பலமுறை நினைக்க என்ற பொருளை நயம்படப் பயந்துநின்றது.

உயிருக்குச் சுவாசமென்றும் உமிழ்தலுக்குக் காலுதல் (-வீசுதல்-எறிதல்) என்றும் பொருளுண்மையின், 'உயிருமிழாநின்றாள்' என்பதற்கு நெடுமூச்செறியாநின்றாளென்றும் பொருள் கூறுவர்.

[இராமன், தான் சீதையை நீ யிக்கிருப்பாயாக என்றதற்காக அவள் வாய்விட்டுச் சொல்லாமல் மனத்துள் வருந்தி நினைந்தவைகளையெல்லாம் குறிப்பாலுணர்ந்துகொண்டு 'இருப்பாயாக' வென்றதற்குக் காரணந்தெரிவிப்பானாய், "இரவினும் வெப்பொழியாத பாலைவனத்துப் பருக்கைக்கற்கள் சுட்டழுத்தலைப் பூவினும் மெல்லிய உன் பொன்னடிகள் பொறுக்கமாட்டா" என்றான்.]

281. "பரிவி கந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை; ஊழி அருக்கனும்
எரியு மென்ப தியாண்டைய தீண்டுநின்
பிரிவி னும்சுடு மோபெருங் கா"டென்றாள்.

இ-ள். "(நீ) அன்பு நீங்கிய மனத்துடன் (என்னிடத்துச் சிறிதும்) பற்றில்லாது (என்னை) நீக்குகின்றாய். (நீ சொல்லிய காட்டினும் எத்துணையோ உக்கிரமான) ஊழிகாலத்துச் சூரியனும் சுடுமென்பது எவ்விடத்துள்ளது? (யான் உன்னைப் பிரியாத இடத்துச் சுடுவதில்லை. அவ்வாறாக, அந்தச் சூரியனினும் எவ்வளவோ தாழ்ந்த சூடுள்ள) காடு, இங்கே (யான்) உன்னைப் பிரிந்திருத்தலினும் அதிகமாகச் சுடுமோ? என்றாள் (சீதை).

பரிவு—அன்பு. இகத்தல்—நீங்கல். பற்று—தொடர்பு. ஒருவுதல்—நீங்குதல்; நீக்குதல் (ஒரீஇ—நீக்கி. பத்துப்பாட்டு). ஊழி—உலகமுடிவு

காலம். அருக்கன்—சூரியன். 'யாண்டையது' என்பதை 'நம்பத்தக்க தன்று' என்று பொருள்படும் பரிகாசக்குறிப்புச்சொல்லாகவுங் கொள்ள லாம்.

'பிரிவினும்சுடுமோபெருங்காடு' என்ற நனி இனிய கவிச்சுவை கனிந்த வாக்கியத்தில், அருவப்பொருளாகிய பிரிவை உருவப்பொரு ளாகிய பாலைவனத்தினுடனும் அப்பிரிவினால் உள்ளத்துள்ளே உண் டாம் துன்ப உணர்ச்சியை அவ்வனத்தினால் உடற்புறத்தே உண்டாம் சூட்டுணர்ச்சியுடனும் உவமித்துச் சுரத்தின் தொழிலாகிய சுடுதலைப் பிரிவுக்கு ஏற்றி, ஏற்றிய இடத்தே, பெருஞ்சூடு செய்வது சுரமன்று பிரிவெனப் பிரிவைப் பெருமைப்படுத்தி ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்கே உண்டாக்கிய நுண்ணறிவு நோன்மை, நுணுகி நோக்கி நுகரத்தக்கது.

[மேலே கூறியவாறு சீதை கூறியதை இராமன் கேட்டு, அவள் உள்ளத்துள்ளே உள்ள கருத்தை ஊகித்துணர்ந்து, கவலையுற்றுத் ததும்பிய கண்ணீரைத் தடுத்து, இவளை யிட்டுச்செல்வோமா, விட்டுச் செல்வோமா, யாதுசெய்வோமென்றெண்ணிக்கொண்டிருக்கும்போது, அவள் மாளிகைக்குள்ளேபோய் மரவுரியெடுத்துடுத்து அவன் எண்ணு தல்முடியுமுன் விரைந்து வந்து அவன்கையைப்பிடித்துநின்றாள். அவள்செயலைக் கண்டவர் யாவரும் துன்பம் பொறுக்கமாட்டாராய்ச் சோர்ந்துவீழ்ந்தார்கள்; இறந்தாரல்லர்: இறவாத காரணம் அவர்கள் இன்னும் பூமியில் இருக்கவேண்டிய நாள்கள் இறவாமையே. ஊழின்படி உயிரோடிருத்தற்பாலார் உலகமுடிவுகாலமுற்றாலும் உயிரொழி யாரன்றோ. தாயரும் தமக்கை தங்கையரும் சகிமாரும் தழலில் வீழ்ந் தார்போன்றார்கள்.

அப்போது இராமன் சீதையை நோக்கி "முல்லையரும்பும் முத்தும் தனித்தனியாகவன்றி ஒன்றுசேர்ந்தெதிர்ப்பினும் அவைகளை எளிதில் வெல்லும் பல்லினாய், எங்களொடு நீ வருதலால் விளையுந் துன்பத்தைச் சிறிதுஞ் சிந்திக்கின்றாயில்லை. அளவற்ற துன்பத்துக்கு எங்களை ஆளாக்குவாய்" என்றான். எனவே, அவள் சினந்து, "என்னுடைய தொடர்பொன்றுதான் உனக்குத் துன்பமானது! என்னை நீக்கி

பொழிந்தபின், எல்லாம் இன்பம்போலும்!" என்றாள். அவன் மறு மொழி வழங்கானாய்த் தெருவழியே செல்வானானான்.]

282. சீரை சுற்றித் திருமகள் பின்செல,
மூரி விற்கை யிளையவன் முன்செலக்
காரை ஒத்தவன் போம்படி கண்ட அவ்
வூரை உற்ற துணர்த்தவு மொண்ணுமோ!

இ-ள். மரவுரி உடுத்துச் சீதை பின்னே செல்லாநிற்க, வில்லேந் திய கையினனாய் இலக்குமணன் முன்னே செல்லாநிற்க, இராமன் (நடுவே நடந்து காட்டுக்குச்) செல்லக்கண்ட அயோத்திநகரத்தாரை அடைந்த துன்பத்தை (நாம் உணரவும் பிறர் உணரும்படி) எடுத்துக் கூறவும் இயலுமோ?

மூரி—வலி; பெருமையுமாம். ஊர் ஆகுபெயராய் ஊராரை உணர்த்தியது.

மூவரும் மரவுரி புனைந்து செல்கின்றாராதலால், அதற்குப்பொருத்த மாகச் 'சீரைசுற்றி இளையவன் முன்செலச்' 'சீரைசுற்றிக் காரை யொத்த வன் போம்படி' யெனக் கூட்டிப் பொருள்கொள்க.

எல்லாச்செல்வங்களையும் தானுடையாளாயிருத்தலன்றித் தன் அருள் பெற்றாரெவருமே அவைகளையுடையராகச் செய்யும் சீதேவியாகிய சீதாபிராட்டி, மேன்மையான பொன்னாடை பட்டாடையில்லாராயினும் தாழ்மையான பருத்திப் பஞ்சுபுடைவையுடைய ஏழைமாதெவளும் உடுக்காத எவ்விலையும் இல்லாத மரவுரியுடுத்தது பெருவியப்புக்கும் பேரிரக்கத்துக்கும் காரணமென்னுமாறு 'சீரை சுற்றிய சீதைபின் சென்றிட' என்னாது 'சீரைசுற்றித் திருமகள் பின்செல' என்றார்.

'விற்கை இளையவன்' என்று இலக்குமணன் வில்லேந்திச் சென்ற தை வெளிப்படையாகக்கூறிக் 'காரை ஒத்தவன்' என இராமன் வில்லேந் திச்சென்றதைக் குறிப்பாகக் கூறினாரெனலாம், மேகத்தை நிறத்தா லன்றி வில்லுடைமையாலும் இராமன் ஒத்திருந்ததனால்.

உற்ற துன்பம் என்று இரண்டு சொற்களைச் சொல்லவேண்டிய இடத்தே, துன்பம் என்ற சொல்லைச் சொல்லாமல் விட்டுவிட்டு, உற்றது என்ற ஒரு சொல்லைமட்டும் சொல்லி, அந்த உற்றது என்பது, அது நிறுவப்பெற்ற இடத்தின் ஆற்றலால், கருதற்கரிய கடுந்துன்பமென்று சிறப்பாகப் பொருள்படச்செய்து சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் ஒருங்கமைத்த அருங்கவித்திறம் வியந்து நயந்து மெச்சத்தக்கது.

தசாதன் கைகேயி யிருவர் தவிர, அவன் மனைவியரனைவரும், சுற்றம் முற்றும், வசிட்டனுள்பட மந்திரி புரோகிதராதி இராசாங்கத்தினரெல்லாரும், மற்றும் அயோத்திமாநகரத்துள்ள ஆடவர் பெண்டிரடங்கலும் கண்டு கரையற்ற துயரத்தை அடைய, மாவுரி உடுத்து இலக்குமணன் சீதை யிருவரும் முன்னும் பின்னுமாக நடக்க இராமன் அயோத்திமாநகா வீதிவழியே காட்டுக்குச் செல்லும் காட்சியை, மற்றைப்படங்கள்போலக் காலகதியிற் சீரணித்தழிதலும் கிழிந்தொழிதலுமில்லாத பாட்டுப்படத்தில் வழிவழி வரும் வாசகர் மனக்கண்கள் தம்மெதிரேகண்டாற்போலக் கண்டு கழிபெருங் களிகொள்ள என்றும் நின்று நிலவுமாறு காவிய ஓவியகாரரான கம்பர் இனிது சித்திரித்திருக்கும் சித்திரம் பலமுறை பார்த்துப் பாராட்டற்பாலது.

[இராமனுடன் தாமும் வனம்போகத் துணிந்தமையால் எல்லாரும் அழுதலைவிட்டு அமைதியாக அவன்பின்சென்றார்கள். தசாதனது மாளிகை முற்றத்தை அடைந்தபோது, இராமன், கூடவந்த தாயரைக் கும்பிட்டு "அரசன் சோகத்தை ஆற்றுங்கள்" என்றான். அவர்கள் துக்கமேலீட்டாற் சோர்வுமீதூர்ந்து உளங்குதலுற்று நாத்தழுதழுப்ப அழுதழுது மூவரையும் ஆசீர்வதித்துத் "தேவர்களே! இம்மூவர்களையும் பாதுகாவல்செய்து காட்டில் வாழும் காலம் கழிந்தபின் மீட்டும் எங்கள்மாட்டு நல்குமின்கள்" என்றார்கள். இராமன் தாயரிடம் அரிதாகப் புறவிடைபெற்று எதிரேநின்ற வசிட்டரைக் கைகூப்பிச் சீதாலக்குமணருடன் தேரேறிக் காட்டுக்குச்சென்றான்.]

நகர் நீங்குபடலம் முற்றிற்று.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

---

**1926-ம்௵ ஏப்ரல்மீ 29௳ (அக்ஷய-௵ சித்திரைமீ 17௳)**

காலை 9 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற
தீர்மானங்களின் விவரம்.

1. மகா-௱-௱-ஸ்ரீ:K. ராமையங்காரவர்கள், B.A., B.L., M.L.A., அக்கிராசனம்வகித்தவர்.
2. ,, மஹாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள்.
3. ,, S. சோமசுந்தரபாரதியவர்கள்,M.A., B.L.
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

I. 1925-ம்௵ டிசம்பர்மீ முதல் 1926-ம்௵ மார்ச்சுமீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகஸபை அங்கத்தினராகிய மதுரை ஹைக்கோர்ட்டுவக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி (M. A., B. L.,) அவர்களை சாசுவத அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-௱-௱-ஸ்ரீ பண்டிட். K. C. நாதன் அவர்கள், Proctor Sc. ரத்தினபுரி, சிலோன்.

(2) ,, D. சாம்பசிவம்பிள்ளை அவர்கள், B. A., L. T., Deputy Inspector of Schools (on leave), மதுராந்தகம்.

(3) மகா-௱-௱-ஸ்ரீ P. A. கிருஷ்ணஸாமிப்பிள்ளை அவர்கள், தமிழ்ப் பண்டிதர், L.E. L.M., Girls Middle School, Porayar, தஞ்சாவூர் ஜில்லா.

(4) ,, K. R. ராதாகிருஷ்ணையர் அவர்கள், Assistant Master, St. Mary's High School, திண்டுக்கல்.

IV. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினரினின்றும் விலகிக்கொள்வதாக எழுதியனுப்பிய அடியிற்குறித்துள்ளவர்களின் ராஜீநாமா அங்கீகரிக்கலாயின.

(1) மகா-௱-௱-ஸ்ரீ S. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள், அவளிவணல்லூர்.

(2) ,, பண்டிட் S.S. ஆனந்தம்பிள்ளையவர்கள், சென்னை.

(3) ,, K. A. சிவஞானம்பிள்ளை அவர்கள், அம்பாசமுத்திரம்.

(4) ,, A. ரெங்கஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L., தேவகோட்டை.

V. சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்வதற்கு மதுரை ஹைகோர்ட்டுவக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ V. சுந்தரமையர் (B.A., B.L.,) அவர்களை ஆடிட்டராக நியமிக்கலாயிற்று.

VI. சங்கத்தின் வருஷோத்ஸவத்தை நடத்த மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களுடன் ஆலோசித்துத் தேதி குறிப்பிட வேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

VII. 1925-26-ம் வருஷத்திய ச்ங்கம் வரவுசெலவுமதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

மதுரை,
29-4-1926.

K. ராமையங்கார்,
அக்கிராசனம்வகித்தவர்.

# கீழ்வேளூருலா.

[உ௬0-ம் பக்கத் தொடர்ச்சி.]

141 பூமகளும் பார்மகளும் பொன்னகரக் கோமகளும்
பாமகளுந் திங்கட் பதிமகளும்——யாமளையு

142 மேழ்வகைமின் ஞரு மெழுநதியின் மாஞநஞ்
சூழ்வகையி னெல்லோருஞ் சூழ்ந்துதொழ——யாழ்வரையின்

143 கந்திருவர் பாடவிரு காது திருப்பதியாய்
முந்திருவர் கீத முடிதுளக்கத்——துந்துமியும்

144 பேரியும் வேயும் பெருஞ்சங்கும் வங்கியமும்
வாரி முரசும் வயிரியமும்——தாரை

145 பதலை முழவுதுடி பம்பை படக
மூதலை முதியு முழங்கப்—பதவி

146 தருஉம் விபுதகுல தம்பிரான் வந்தான்
மருவுமடி யார்க்கெளியான் வந்தான்—இரதி

147 நிலைசித்ர காந்தனையே நீறுசெய்தான் வந்தான்
மலைசித்ர கூடத்தான் வந்தான்—நிலத்துக்

148 கனமலையா மற்காத்த காளகண்டன் வந்தான்
வனமுலையாள் பாகத்தான் வந்தான்—முனிவு

149 தருநாளிற் கூற்றுதைத் தான்வந்தா னூழி
வருநாளுங் கேடிலான் வந்தான்—திரிபதகை

150 வெளவப் படுமகுடன் வந்தான்வந் தானென்று
தெய்வத் திருச்சின்னஞ் சேவிப்பப்—பௌவத்தி

---

141. திங்கட்பதிமகள் துர்க்கை; யாமளை - காளி; 'மூன்றுதிருக்கண் மகளும் பொற்றிகிரிக்கைம்மகளும்' என்பது ஆரூருலா 114. 143. இருகாது திருப்பதியாய் முந்து இருவர் கீதமுடி துளக்க: அசுவர் கம்பளதாரென்ற உரகர் இருவரும் இருகாதுகளிற்றங்கி யாழ்வாசிக்க. ('வெண்கோட்டு வண்டோடு இசைத்தேன் இருவர் இறைப்ப' என்பது ஆரூருலா116). 144. தோற்கருவி வகை. 147. சித்ரகாந்தன் - ஓவியம்போல் அழகுடைய மன்மதன்.

151 னெண்மடங்கு மிக்க தெனப்பவனிக் கேதனத்தின்
விண்மடங்கு வீதி வெளிப்படலும்—உண்மை

152 தெளித்த வறஞ்சொன்னார் திண்சிலைக்கு மூன்னாண்
அளித்த மடமாத ராரும்—விளக்க

153 மடுத்ததொடு நாணுக்கு மவ்விருவ ருக்குங்
கொடுத்த வுலகிற் குலமு—மிடப்புறத்துத்

154 தாரந் தருதலத்துத் தையலரும் போனகத்தின்
வாரந் தருதலத்து வல்லியரு—மீரேழ்

155 படிவழங்குஞ் சிரிளைய பாலர்க்கு மூத்த
குடிவழக்கு மூர்ப்பெண் குழாமுங்—கடவுட்

156 பெருமா னிரந்துண்ணப் பெருண் கலத்தைத்
தருமா நகர்ப்பே தையரும்—திரிபுரத்தின்

157 ஏவுதவும் வீர னினிதேற வேறென்னு
மாவுதவும் பொற்பதியின் மங்கையரு—மேவுதலும்

158 மன்னு திருத்தே ரவர்க்கீந்த பேரிடத்துந்
துன்னு மடவார் தொகையெல்லாந்—தொன்னன்

159 மறுகுங் கடிமதிலு மண்டபமு மன்றுங்
குறுகும் படிமிடைந்து கூடிப்—பிறைவெண்

160 கொழுந்தும் பகிரதியுங் கோமளக் கொத்து
மழுந்துங் கடுக்கை யழகுஞ்—செழுந்திருநீ

161 றிட்ட நுதலு மிருகாமர் பொற்காதும்
வட்ட மதியமுத வாண்முகமும்—விட்டெறிக்கும்

162 கண்மலரும் புன்முறுவற் கன்னிச் சிறுநிலவும்
பண்மலருஞ் செவ்வாய்ப் பவளமு—மண்முழுதும்

---

152. அறஞ்சொன்னார் - ஈசன்; 'புறம்பயமதனில் அறம்பல அருளியும்' என்னுந்தொடரை நோக்குக. 154. இடப்புறத்துத்தாரம்-உமாதேவி. தையலர்—மலைநாட்டினர். 155. இளையபாலர் - முருகன். மூத்தகுடி - தெய்வயானை. ஊர்ப்பெண் - இந்திரலோகத்து மேனகை முதலியோர். 157. ஏ - அம்பு. 160. பிறைவெண்கொழுந்து : இளம்பிறை ;—பகீரதி : கங்கை

163 காத்த திருநீல கண்டமுந் திண்டோளுஞ்
சேர்த்த புரிநூற் றிருவழகுஞ்—சாத்துந்

164 திருமேனித் தாழ்வடமுஞ் செஞ்சாந்து மார்பும்
பெருமேனிச் சோதிப் பிழம்பும்—பரமர்

165 உவந்தமழுக் கையு முரகமணிக் கச்சுஞ்
சிவந்ததிருத் தாளுஞ் சிலம்பும்—கவிழ்ந்து

166 தெரிசித் ததிசயித்துச் சேவேறிக் கன்பு
புரிசித்து நைந்து புகழ்ந்து—பரசிப்

167 புவனிக்கு முத்தி பொருந்துந் திருத்தேர்ப்
பவனித் திருவெழுச்சி பாரீர்—நவநீத

168 முண்டே வளர்ந்தா ருடையார்க் கொருவிடையாய்த்
திண்டோர்முன் செல்லுஞ் செயல்பாரீர்—பண்டொன்றாய்

169 வைத்த திருமால் வரவரும்பா லாழியென
நித்தர் குடைக்கீழ் நிழல்பாரீர்—அத்தர்மீ

170 தேற்கும் பிறைநிறைவ தெப்போதென் றண்ணாந்து
பார்க்கும் பணியின் பணிபாரீர்—நாற்கையினால்

171 ஓங்குங் களிறு மொருகே ழலும்பொருது
வாங்குந் தாள வடம்பாரீர்—பூங்கொடியீர்

172 வாரீர் இலங்கை வனத்தார் திருவழகைப்
பாரீர் எதிர்போய்ப் பணிந்தென்பார்—பூரணரைப்

173 பண்ணீர் மொழியீர்நாம் பாராமற் கங்கையுங்
கண்ணீராய் மூடினளோ காய்ந்தென்பார்—அண்ணலார்

174 தேரோடுந் தூளேனுஞ் சேர்ந்தே நுமதுண்கண்
ணீரோடும் போது நிலாதென்பார்—ஓர்கூடல்

---

162. கன்னி - இளமை. பண் - பாட்டு. 167. நவநீதம் - வெண்ணெய். 168. உடையார் - சிவபெருமான். 170. பணி—முன்னது நாகம், பின்னது செய்கை. 174. தேரோடுதலினால் உண்டாகும் துகள் கண்ணிற்பட்டும் கண்ணீர் அடைபடாதென்ற நயம் காண்க.

175 மட்டார் வணிகர் மகளிர்க்குக் கைவளையன்
திட்டார் நமைப்பறித்தா ரின்றென்பார்—பட்டாடை

176 செம்மையொருத் திக்குத் திருப்பனந்தா ளிற்காத்தா
ரெம்மை யுடைகவர்ந்தா ரிங்கென்பார்—பெம்மாற்குத்

177 துற்றபெருந் தாருவனத் தோகையரு நாமுமே
குற்றமிகச் செய்த குடியென்பார்—உற்றிவரை

178 நேர்வளையப் பார்ப்பதற்கு நின்றுநின்று போமென்று
தேர்வளையத் தாழ்வோந் திரண்டென்பார்—போர்வேளைத்

179 தீய்த்த வரிய திருமேனி கன்னிக்கு
வாய்த்தபடி யெப்படியோ வந்தென்பார்—பார்த்தளவில்

180 பூத்தார்க் குழலாள் புணர்ந்த வகைபிருங்கி
கூத்தாற் கிடைத்த குலாவென்பார்—மாத்தேரின்

181 முன்னமொரு பங்குபெற மொய்விரதஞ் செய்கென்று
சொன்னமுனி யாரோ தொழுவென்பார்—இந்நெறியே

182 மன்னியெதிர் நின்று வயற்காஞ் சியிலுதவு
கன்னிவிழித் தாடநடுங் கம்பமே—இன்னிசையின்

183 வண்டார் கயிலையிலே மாரனு லைக்களத்துக்
கண்டாத கல்லா லடிக்கரும்பே—விண்டோய்

184 வெளிறீனு நாவலின்கீழ் வீற்றிருந்து முக்கட்
களிறீனு மென்னுனைக் கன்றே—பிளிறிக்

185 கொழித்த முரசதிருங் குற்றாலத் தன்பு
பழுத்த பலவின் பழமே—கழுக்குன்றிற்

---

175. திருவிளையாடல் வளையல்விற்ற படலம் காண்க. அன்று வளையல் விற்ற அவரே இன்று பறித்தார் என்பர். 176. தாடகை அம்மையார்க்குத் தலைகுனிந்து கலைசோர்ந்ததைக்காத்த கதை. 'செங்கண்வெள் ளேற்றின் பாகன் றிருப்பனந் தாளின் மேவு மங்கணன்செம்மைகண்டு கும்பிட' கலயர்புராணம் ௨௩. 'பைம்பொன் மாமுடி வளைத்தது' (பனசைப்புராணம் தாடகை பூசனைச்சருக்கம்) என்பவை பார்க்க. 184. முக்கட்களிறு-கணபதி. 185. பலவின்பழமே-திருக்குற்றாலப்பதிகக் கருத்தை நோக்குக.

186 பண்டுதிரு வாதவூர்ப் பத்தன் றதி....ப்பக்
கண்டு தொழுங்கருப்புக் கட்டியே—வண்டு
187 திளைத்த பழனத் திருநெல்வே லிக்குண்
முளைத்ததொரு வேயீன்ற முத்தே—களிப்பி
188 னமர்ந்த மழுவையின்க ணம்மூவர் பாட்டுஞ்
சுமந்த தொருவயிரத் தூணே—யமைந்த
189 வினத்தி லடியா ரிருநோய்க் கிலந்தை
வனத்தி லிருந்த மருந்தே—யனைத்துந்தன்
190 னிச்சை வனமுலையா ளென்னு மொருபழைய
பச்சையுடன்..................................................
..........................................................................
...........கேடில்லா மணியே—முதற்குரியோன்
191 போலே மலயக்கால் புக்கிறைஞ்ச வந்தாலென்
மேலே யெரிசொரிய வேண்டுமோ—சாலச்
192 சொரிந்தா லுமைமுன் தொழுதள கேச
னருந்தா திருப்ப தறமோ—பெரும்புணரி
193 யும்மகத்தைத் தீங்குசெய்யா தோடுவதும்மைத்தொழுத
வெம்மகத்தைத் தீங்குசெய்வ தேற்குமோ—நம்மகத்தைத்
194 தீங்குசெயி னிப்பதியிற் செய்தவத்தான் கைவடிவேல்
வீங்கு திரைபருக வேண்டாமோ—வீங்கெதிரப்
195 போது மெமையும்மைப் பூசித்த கேசவர்முன்
னூதுங் குழல்வருத்த வொண்ணுமோ—தீது
196 விடுநா ளுமைத்தொழுந்தீ வேயைத் துளைவாய்ச்
சுடுநாள் முழுதுஞ் சுடாதோ—கொடுவேசி
197 தாளுந் தொழுவெழுநுஞ் சாதனத் தொண்டர்க்கோ
வாளுங்கோ வாவீ ரமாரே—தோளிணைக்கே

---

186. திருவாசகம் திருக்கழுக்குன்றப் பதிகம் காண்க. 188. மழுவாடிப் பெருமான்—வயிரத்தூணீசர். இதனைத் திருத்தாண்டகத்தாலறிக. 195. உம்மைக் காணவரும்போது உம்மைப்பூசித்த நாரணன்குழலுக்குத் தளர்வது முறையோ. 197. முன் 40—45ம் கண்ணிநோக்குக.

198 தூங்கு மகப்பயந்தாள் சோரத்தி லென்னவழு
தேங்குபெண்ணுக் கல்லா திரங்கீரோ—நாங்கள்

199 வளரும் பவனிதொழ வந்தா லெமது
இளருமட நாணங் கெடுத்தீர்—உளமகிழ்ந்து

200 கேடிலியை நாடுமேவர் கேடில ரென்றதிருப்
பாடலுமக் கன்றோ பரமரே—கூட

201 வொருக்கா நினையீ ருவந்தென்னச் செந்தேன்
முருக்கா லொழுக மொழிவார்—திருப்புணரு

202 மம்மீன் விழிதரித்த வங்கமெலாம் பாவையார்
றம்மீன் விழியைத் தரிப்பிப்பார்—மொய்ம்மீனின்

203 மாக மதியுரைத்த வார்கழலார் பாலித்த
மோக மதியுரைத்து முன்னிற்பார்—ஆகமதன்

204 தீதயர் இன்ற சிலையாலிவ் வாறலையுங்
கோதையர் தங்கள் குழாத்தொருத்தி—பேதை

பேதை.

205 தனுமலையின் வைகாத் தமதுசித்ர கூட
மெனுமலையின் வைகு மிளங்கால்—தனிமதனைச்

---

198. 46—49 ம் கண்ணியிற்கண்ட கதை. 200. 'கேடிலியை நாடுமேவர் கேடிலர்' என்பது தேவாரம்.

201. ஆளான வடியவர்கட் கன்பன் றன்னை
யானஞ்சு மாடியைநா னபயம் புக்க
தாளானைத் தாளுெப்பா ரில்லா தானைத்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை யரையி லார்த்த
கீளானைக் கீழ்வேளு ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமேவர் கேடி லாரே.

(தேவாரம் திருநா-VI கீழ்வேளூர்—௧.

இப்பதிகம் முழுவதும் இம்மகுடமே புனைந்துவருவது.

201. திரு - இலக்குமி, 202. மீன் - மச்சாவதாரமெடுத்த மேகவண்ணன். 205. தனுமலை - மேருமலை.

206 செற்றா ரிருப்பத் திருவிலந்தை வந்ததென
முற்று வமுதின் முளைத்தமுளை—மற்று

207 மொருவரையு மொவ்வா துபயநடங் கண்டோன்
கருவரையின் சந்தனப்பூங் கன்று—குருவிகழ்ந்த

208 வாயை வெருவிவரும் வாசவனார் வீற்றிருப்பச்
சாயை தழையாத் தருக்கொழுந்து—தீயவினை

209 மாறத் தவஞ்செய் மகனார் பெருஞ்சமருக்
கேறத் தகாத விளந்தோகை—வீறமர்க்குத்

210 தாண்ட விடுவிடையார் தம்மைப் பூசித்தவராற்
றீண்ட நிறையாச் சிறியபிறை—ஆண்டா

211 னுகள வடிதாங் கொருதிருமா லுந்தி
முகுளம் விரியா முளரி—நிகளகிரி

212 ஆடல் மகவா னகத்தினாள் மேகமெனக்
கூடல் புகுதாக் குழலினாள்—நீடுகிரி

213 வெள்ளியா யார்க்கு விபுதருக் கண்ணுமடைப்
பள்ளியா காதவிரு பார்வையாள்—தெள்ளமுத

214 மூறிக் கலங்கலென வோரெழுத்துக் கோரெழுத்து
மாறிப் பொருள்பயக்கும் வாக்கினாள்—பேறெவரும்

205 காசியில் வேண்டுவதுங் கார்க்கமலை வேண்டுவதும்
வீசியிது வென்றுணர்த்தும் வெண்பல்லாள்—ஓசையெழ

216 வம்பு ளடங்கு மதன்புற் புதமுமொரு
கொம்பு ளடங்குமொரு கோங்கரும்பும்—பைம்பாளை

217 நள்ளடங்கும் செவ்வி நறுங்குரும்பை யும்பசுந்தா
ளுள்ளடங்கு மம்போ ருகவரும்பும்—வெள்ளைக்

---

206. செற்றார் - கொன்றார். 207. உபயநடங்கண்டோன் - கான்மாறி யாடியதுகண்ட பாண்டியன். கருவரை-பெரியமலை-பொதியம். 211. உகளம் - இரண்டு. முகுளம் - மொட்டு. முளரி - தாமரை. 212. மகவான் - இந்திரன். அவன் அகத்தினாள் - இந்திராணி. 215. காசியி லிறக்க முத்தி கமலையிற்பிறக்க முத்தி என்பதைவேண்டுவது மாயு. அவற்றைவிட மேலாகுமிது வென்பது. 216. அம்பு - நீர். புற்புதம் - குமிழி: 217. நற்றடங்கும் - நடுவிலடங்கும்.

218 கரிரத் தடங்குங் கனமருப்பும் போலச்
சரிரத் தடங்குந் தனத்தாள்—ஒரிழைதன்

219 வாதினுமுன் வென்றார் மதுரைவிளை யாட்டெனத்தன்
மீதினுமண் சூடும் விளையாட்டாள்—ஓத

220 மிழைத்தமனை பாவை யெடுத்தழித்த லோடும்
அழைத்தமனை காணு தழுவாள்—விழித்தெதிரே

221 தாயோர்கண் ணாடி தனைப்பார்ப்பத் தான்பார்த்திங்
காயோ விரண்டுண்டென் றாடுவாள்—தீயோ

222 கயத்திற் படுவதெனக் கஞ்சமலர் கண்டு
பபத்திற் படுபயமும் பாராள்—நயக்கிளியும்

223 பூவையும் வண்டலும் பொற்கிண்ண மும்பாலும்
பாவையும் விள்ளாப் பருவத்தாள்—கோவையிதழ்

224 பொய்தல் புகுந்து புதுமணந்தன் பாவைக்குச்
செய்தல் கருதுமொரு செவ்விக்கண்—சைவவிதிக்

225 காயிரம் பொன்னு வடுதுறையி லன்றுபெறச்
சேய்விரும்பிப் பாடுந் திருப்பாட்டன்—காய்கதிரின்

226 மூவர் கணவன் முகமாறி னார்தமையன்
தேவர் தமது திறன்மாமன்—பூவகத்தின்

227 மன்னு மிலங்கைக்கா மருகன்றன் பொற்பதமே
யுன்னு மடியார்க் குருகுமரன்—தன்னெடுந்தே

228 ரோடிமறு கெங்கு முலாவுந் திருவுலாக்
கோடிதிருச் சின்னங் குழுறுதலும்—நாடித்

229 தழங்கு மகளிரொடுந் தாயரொடு மாயம்
வழங்கு மகளிரொடும் வந்தாள்—ஒழுங்கே

---

221. தாய் ஒரு கண்ணாடியிற் றன்னைப்பார்க்கத் தானும் அதனிற்பார்த்து தனக்கு இரண்டு தாயுண்டென்று ஆனந்தமடைவாள். 224. சைவவிதி-ஆகமத்தின்வழியே செய்யப்படும் யாகம். 226. கதிர்மூவரைக் கண்களாகவுடையவன். முகம் ஆறினார் தம் ஐயன் - திறல்மாமன். 228. பூவகம்-பூமி, குமரன் - அஞ்ஞானத்தைப் போக்குபவன்.

230 கொழுதி யளிகளிக்குங் கோதை யீரன்பாற்
றெழுதி ரெனப்போய்த் தொழுதாள்—சூழுமடவீர்

231 வாங்குமிங்கென் பாவை மணமாலைக் கிப்பெருமான்
தாங்குதிரு மாலையெனச் சாற்றினாள்—பூங்கொடியுஞ்

232 சொன்ன பசுங்குதலைச் சொல்லை மகிழ்ந்துமுல்லை
யன்னநகை யாரும்விளை யாடியே—முன்னொருபெண்

233 கொத்தார்க்கும் வேணி குடிபுகுதக் காதலித்த
தித்தார்க்கும் பெருமை யெண்ணாதே—யத்தனார்

234 தன்னை மணஞ்செயுநாட் டன்கழுத்துச் சூடுவதற்
கன்னைதவஞ் செய்த தறியாதே—............

235 வள்ளையேய் தாழ்குழையாள் வாமத்தா ரேமத்தார்
கிள்ளையே யாமெல்லாங் கேட்பதோ—கள்ளவிழும்

236 வாரிங் திரநீல வண்ணனால் வேர்பறிந்த
தாரிங் திரபாரி சாதமோ—வீரன்

237 நடைநெகிழ்ந்த தீமகத்த நாட்கதையால் மொத்தத்
தொடைநெகிழ்ந்து வீழ்ந்த துழாயோ—புடைமகன்

238 வென்றி விலங்கிடுநாள் வீக்கியவெண் டோளோடுங்
கன்றி முகம்புலர்ந்த கஞ்சமோ—கொன்றைநறுஞ்

239 செம்மாலை மற்றுமுள்ள தேவர் முடிதரித்த
வெம்மாலை யும்போ லெளியதோ—நம்மாதே

240 யான்ற விருபா லரிபிரமர் தங்களையு
மீன்ற புயஞ்சுமந்த வேற்றங்காண்—மூன்றுலகும்

241 ஏத்தியசண் டேசனிறைவன் பிறைமவுலி
சாத்தியபின் சாத்துங் தவப்பயன்காண்—பூத்தெரியல்

242 தையால் பெறநாம் தரமலகா ணென்றுமலர்க்
கையா லணைத்தாற்றுங் காலத்தே—செய்யாள்

---

230. கொழுதி - கூட்டம். 236. வீரன்- அகோரவீரபத்திரன். 237. நடைநெகிழ்ந்த - விதிக்குமாறாக நடந்து. தீமகத்து அந்நாள் - தகுதிபெறாத யாகத்தைத் தக்கன் செய்த அந்நாள்.

243 சுதன்பெருந்தேர் பின்றாண்டத் தூண்டினான் சூலா
யுதன்பெருந்தேர் மற்றாங் கொருத்தி—பெதும்பை

## பெதும்பை.

244 வறிது பயிலாது மாந்த நிரம்பாது
சிறிது களியளிக்குந் தேறல்—விறல்வேற்

245 சரந்தொடுகைக் கொன்றுந் தருண வரும்பு
கரந்தொடுகைக் கொன்றுங் கரும்பு—பெருந்தேவர்

246 சால வருந்தத் தரும்பதமா மல்லவெனக்
கால மதிக்குங் கலாமதியம்—ஞாலம்

247 தணப்ப வெழுந்து தழுவுசெழுங் கொம்பின்
மணப்ப வரும்பருவ வல்லி—கணப்போதின்

248 வேளிட்ட நூல்வழியே மேயநான் கும்புகுத
நாளிட்ட வீடன்ன நன்னெஞ்சாள்—தூளி

249 புகும்விளையாட் டிற்கும் புனல்விளையாட் டிற்கும்
தகும்விளையாட் டுள்ளுந் தரத்தான்—பகிரதற்கு

250 மொய்யளகங் காட்டி முதல்முடித்த வண்ணம்போல்
மையளகங் காட்டி மலர்முடிப்பாள்—எய்யும்போர்

251 ஆங்கா நிலைகேட்ப அக்கயிலைக் கேவிசயன்
போங்காலவன்பகழி போல்விழியாள்—தாங்கியசூன்

252 முட்டிப்பே ரண்ட முகடுதிறந் தாழியம்புள்
ளெட்டிப்பார்த் தன்ன விளமுலையாள்—வெட்டுஞ்

253 செறிவாள் விழியார் செய்குறிப்பை யெல்லா
மறிவாள் செயுமா றறிவாள்—பிறர்வாயிற்

254 கேட்ட சாதவிதம் யார்க்குங் கிளத்தாது
கூட்ட வயதொத்தாற் கூறுவாள்—தீட்டரிய

255 மாதர் குழாஞ்சூழ வந்திந்து காந்தமெனும்
சீத மணியரங்கு சென்றேறிக்—கோதில்

---

243. செய்யாள் சுதன் மன்மதன். சூலாயுதன் சிவபெருமான். 248. வேளிட்டநூல்: அநங்கநூல்.

256 கிளைத்தாம முத்துங் கெழுமுகழுங் கேழுங்
வளைத்தா மரைசிவப்ப வாங்கி—முளைத்தண்

257 பிறையும் பணியும் பிணங்கு மவுலி
யுறையுந் திருவிலந்தை யொன்று—மறையுந்

258 தனிமைத் தமிழ்விரகன் தன்கண் குளிரவ்
வினிமைத் திருக்கூத் திரண்டுந்—துணியின்

259 அழுக்குளத்தி னீங்க வடிபணிந்த வன்னி
முழுக்குளத்தின் கோணங்கள் மூன்றும்—விழுப்பக்

260 கறைநாறும் வேலனரா காரியெரிகண்ட
நறைநாறு தீர்த்தமொரு நான்கு—பிறைமுன்

261 சமைத்த தவத்தின் சரவணவேள் முன்னாள்
அமைத்த புறத்தகர மைந்தும்—உமைக்கும்

262 நெடிய புதல்வன் நிமலன் கமலத்
தடியை வணங்குமுடி யாறும்—படியோ

263 டழியாத வண்ட மழிபோதுந் தம்பே
ரழியாத பேராழி யேழுஞ்—செழுமான்

264 குமுத மழலை கொடுபாடு பாட்டின்
அமுதநிறைந்தாடு மளவில்—நம துபவந்

265 தோமளிக்கு மாறு தொலைத்தகா ளத்திதனில்
கோமளிக்கு ஞானப்பூங் கோதைக்கும்—எமச்

266 சி மய மெனுமாடத் தென்காஞ்சி தன்னிற்
சமய வறச்சாலைத் தாய்க்கும்—இமையோர்

267 தொழுது பெறுமருணைத் தொன்னகரத் தண்டம்
முழுதுபெறு முண்ணா முலைக்கும்—பொழிதேவர்

268 பூமிக்க மன்றிற் புகழ்ந்து கதியோரும்
காமிக்க நின்றசிவ காமிக்கும்—நேமிக்குள்

---

260. வேலன்: முருகப்பிரான் அரா ஆதிசேடன் காரி விட்டுணு எரி அக்கினி இவர்கள் நால்வரும் தீர்த்தம்கண்ட வரலாறுமுன் 20–23 கண்ணிகள் பார்க்க. 262. 15-ம் கண்ணிக்குறிப்பைப்பார்க்க. 265. ஞானப்பூங் கோதை காளத்தியில் எழுந்தருளியிருக்கும் எம்பிராட்டி; 267. அண்ணாமலையிற்கோயில் கண்ட திருக்காமவல்லிக்குண்ணாமுலை என்றுபெயர். 268. மன்று சிதம்பரம்,

269 மல்குகம லாலயத்துள் வந்தெவருங் கேட்டவரம்
நல்குகம லாலய நாயகிக்கும்—புல்குகுழல்.

270 மஞ்சினு மொய்த்த வனமுலையாங்கீழ்வேளூர்ப்
பஞ்சினு மெல்லடிக்கும் பாகனுர்—கஞ்சக்

271 கருவி யுடனைங் கருவி துவைப்ப
வெருவி வினையனைத்தும் வீயத்—தெருவில்

272 வாலுங் கழங்கும் வளைமுழங்குங் கையும்
விரலும் பொறையார விட்டாள்—மூரலும்

273 சுரும்பும் பசுங்கிளியுஞ் சூழ்குழலும் யாழும்
கரும்புந் தருஞ்சொற் கணத்தர்—விரும்பி

274 யெழலு மெழுந்துமருங் கேகலு மேகித்
தொழலுந் தொழுது தொடர்ந்தாள்—அழகொழுகு

275 மெய்யுந் திருநீறும் வெள்ளமுடியும் மருவுங்
கையுந் திருத்தோளுங் கண்ணுற்ருள்—தையன்மீர்

276 ஆர்க்கும் விழிகளிரண் டன்றே வதிகமிவர்
ஏர்த்த நுதற்கண் ணெதற்கென்ருள்—தார்க்குழலாய்

277 இப்பே ரழற்கண் ணிறைவர் படைத்திலரேல்
முப்பே ருலகுமிருள் மூடாதோ—எப்பாரும்

278 எங்குஞ் சமய மெவையுந் தவிர்ந்தவமே
பொங்குமுல காயதமாய்ப் போகாதோ—செங்காந்த

279 ளங்கரும்பை வெற்பை யரவை யரியம்பை
வெங்கரும்பு வண்டுமலர் வெல்லாதோ—சங்கார்க்கும்

280 ஓரா யிரங்கண் ணொருநாண் முனம்பெற்ற
பேரா யிழிவு பெருதோ—கார்வண்

281 டுழுந்தாரைச் சூடு மொருத்தி சடலைக்கே
விழுந்தாரைப் போலாய் விடாளோ—கொழுந்தழலா

282 மிக்கண் பொருதபயத் தின்னநங் தவமுனிவர்
அக்கண் பொருதவே ளஞ்சுங்காண்—இக்கண்

270. பஞ்சினுமெல்லடியாள் என்பது கீழ்வேளூர் அம்மன் திருநாமம்.

283 நெடுங்க ணிரதி நிறைத்ததிருத் தாலி
இடுங்கண் பறித்த வியமன்—தடங்கண்ணாய்

284 காம தகனனென் றுங் கண்ணுதலோ னென் றுமவர்க்
கேமமுது நாம மிட்டதுகாண்—....

285 வழியு முலகில் வயங்கொளிகட் கெல்லா
மொழியு மிதுவே முதல்காண்—தொழுதிறைஞ்சாய்

286 மானேயென் றந்த மடவா ரெடுத்தியம்பத்
தானேசற் றன்புதலைப்பட்டாள்—வானத்

287 தருணோ தயப்பதும மாதிமுடிநாடித்
தருணோ தயப்பூந் தளவம்—பரிமறிப்ப

288 தென்னச் சிறிதே யிதயக் களிவிளைத்தாள்
வன்னப் பசப்பு வரநின்றாள்—அன்னையரும்

289 கண்டிப் பருவக் கடையடைந்தா ளென் றிவளை
யண்டித் திரும்வாழ்த்து மவ்வளவிற்—பண்டுசினம்

290 செய்கால காலருந்தந் தேருந் தெருக்கடந்தார்
எய்காலம் போதா திவட்கென்றே—மெய்காய்ந்த

291 பெற்றித் தழற்கணிலை கேட்ட பெண்மீது
வெற்றிச் சரம்விடவே றில்லையென்றே—மற்றெதுவோ

292 துங்க விசிகந் தொடுத்த தொடைமடக்கி
வெங்கண் மதனகன்றான் வேறொருத்தி—மங்கை

மங்கை.

293 செருகப் பதம்போந்த செவ்வந்தி மாலை
பருகப் பதம்போந்த பாகு—பொருமதனைக்

294 கூவப் பயின்ற குயிற்பே டிரலையொடு
தாவப் பயின்ற தருணமான்—காவியிதழ்க்

295 கொத்துறவின் வண்டுங் கொழுஞ்சாந்தும் பூந்தாரும்
புத்துறவு செய்யும் புரிகுழலாள்—முத்துநகை

296 வன்னிப்போர் செய்தார் மழுவிடை தாடகையைக்
கன்னிப்போர் செய்தகடைக் கண்ணிணையாள்—செந்நிறத்து

297 மூந்து மிறங்கோ மூதலீற்றுத் தீம்பால்போல்
வந்து மதுரித்த வார்த்தையாள்—சந்திற்குப்

298 பைத்தப்பக் கன்றும் பதம்போய் பதம்பாகர்
வைத்த சுரிநிகரு மாமுலையாள்—நித்திலப்

299 பூண்வகையு மின்பம் புணர்வகையு மாடவரைக்
காண்வகையுங் கற்ற கலைவல்லாள்—பூணும்

300 வடக்குங் குமமுலையாள் மால்விளம்பா துள்ளத்
தடக்குங் குறிப்பு மறிவாள்—சுடர்க்கடகக்

301 கைக்காரிகையாருந் தாமுங் கலந்தேகி
மைக்கா ருறங்கு மலர்க்காவில்—புக்க

302 தெருவி லொருநாட் சிவன்வரக் கண்டு
பரிவிலொரு தூ துவிடப் பார்ப்பாள்—திருநுதலின்

303 மூரித் தழற்கண் மூனிந்தமையால் விற்கரும்பி
ஞரிச் சுரும்பே நடவாயே—பேரிமய

304 வாச மகள்கரத்தில் வைகலாப் பைங்கிள்ளாய்
ஈசர் மருங்கெனக்கே யென்னுயே—வாசவனும்

305 யாகக் குயிலை யிறகரிந் தார்மருங்கிற்
போகக் குயிலே பொருந்தாயே—வேகத்தால்

306 உன்ன தொருதலைவ ஞேர்தலை கொய்தார்மு
னன்ன வரசே யணுகாயே—என்னிடரைப்

307 பூமியிற் சேரம்பும் போற்சிலையு முள்ளார்முன்
மாமயிலே நீபுகல வல்லாயே—போம்வழியி

308 னீசான்ன கைக்காப் பிடுங்கருடற் கும்முனக்குங்
கூசாத்திற் சாயக் கொதியாதே—பேசினல்

309 நாமொரு புள்ளன்ரே நமக்கிரங்கா ரென்னுதே
காமர் கழுக்குன்றிற் கண்டாயே—மாமதுரை

310 மன்றிரங்குங் கூத்தர் வலியனுக்கு நாரைக்கு
மன்றிரங்கும் பேரு மறிவாயே—குன்றவில்லி

311 வாமத் திலங்கைதவன மாதவஞ் செய்தார்முன
காமச் சுதினமெனக் காணுதே—தீமையுரி

312 வேதனையுங் கங்குல் விடுவித் தெனக்கிறைவன்
கேதனம்வாழ் வித்தகதை கேட்டாயே—தூதுபோய்
313 முன்னான் விடமானார்முன்புகன்று காய்ச்சினத்தின்
னுன்னானுக் கூணிரண்டு மோட்டாயே—பன்னாளும்
314 நீநூற்று வாயாயின் நீக்குவா யிப்போதென்
தாய்நூற்று வாயுரவந்தள்ளாதே—தூய்தாக
315 இன்னே பெருமா னிதழியந்தார் தாராயென்
மன்னே யெனத்தொழுது வாழ்த்துதலும்—பொன்னே
316 கடுத்த கடுக்கை கடிகமழ் கங்கை
யடுத்த திருச்சடிலத் தானே—விடக்கனலி
317 யீட்டாவத் தாழி யெழ்த்தேவர் காவென்னக்
காட்டாவங் கேட்டிரங்குங் காதானை—மூட்டமரின்
318 வீரவவுணர் வியனகரி மூன்றெரிய
மூரன் முகிழ்த்த முகத்தானை—யோரிரண்டு
319 பாடகத்தா ளம்மை பதினாலுலகத்தாள்
சூடகத்தா ளூறுபடுங் தோளானைக்—கூடலரைத்
320 தாயதொரு சூலத்தாற் றூங்குமிரு புள்ளார்தங்
காயமிரண் டேந்து திருக் கையானை—பாயலார்
321 மேலையரிக் கொம்பும் விறலாமை யுந்தலையின்
மாலையுங்கூத் தாடுநெடுமார்பானை—வேலையால்
322 காப்புடைய வண்ட கடாகமுடிக் கச்சின்
யாப்புடைய செம்பொன் னிடையானை—பாப்பமளி
323 மண்ணிடந்து தேடு வராகமொரு தாமரைக்குக்
கண்ணிடந்து சாத்துமலர்க் காலானை......
324 தெள்ளுந் தெருவிற் றிசையுமிசை யுந்தடவிக்
கொள்ளுங் கொடித்தேர் கொடுவாளும்—வள்ள
325 முலையாள் மயலொழித்து மொய்யிலங்கை சூழ்ந்த
மலையா ளுடையார் தாம் வந்தார்—தலைவணங்கி
326 வேணியு முக்கண்ணு வெண்முறுவற் செம்முகமும்
பாணியு மானும் பதச்சிலம்பும்—மாணிக்க

327 மேனியுங் கண்ணால் விழுங்கித் துகில்வழங்கு
மானியங் கண்டாள் மயலானாள்—மானிதயக்

328 காதலையீந் திலங்கைக் கானத்தார் தேரூர்ந்து
போதலை மேயினார் போயினார்—மாதிவளும்

329 வீசித் திரியூழி வெள்ளமுங் கொள்ளாத
மாசித்ர கூட மலையாரே—யீசரே

330 யக்கரே வெண்ணீற் றழகரே யானந்த
நக்கரே கேடில்லா நாதரே—மெய்க்கணியா

331 மிவ்வார மானைக்கா வென்னுமூர் நீர்பூண்ட
வவ்வாரம் போலென் றசன்றீரோ—செவ்வானிற்

332 கார்போன் மிடற்றீரென் கண்ணீரு நீர்முடித்த
நீர்போற் சிறிதாய் நினைத்தீரோ—கூர்முனையின்

333 வெண்பிறையாங் கூற்றுவனை வேணிக்குள் நீரணிந்த
தண்பிறைபோ லெண்ணித் தணிந்தீரோ—திண்பனையாம்

334 போராண் மணியைப் பெருமானே நீர்தினமு
மூரான் மணிபோ லுணர்ந்தீரோ—ஆராயின்

335 கானாயர் வேயுமிரு காதுக் கினத்தாது
மானாயர் வேய்போ லறிந்தீரோ—மேனிசுடர்

336 செய்களபங் கூடற் றிருமூர்த்தி பாரரைத்துப்
பெய்களபம் போன்மதித்துப் பேர்ந்தீரோ—மையலால்

337 ஆற்றே னெனுமா றறியாதே யஞ்சிநெஞ்சங்
தேற்றே னெனுமாற்றந் தேறாதே—கூற்றுதைத்தீர்

338 என்பா லிரக்கமன மில்லாதே நின்றீரென்
றன்பா லழியா தழுங்குதலுங்—தன்பாணி

339 வில்லு நுதலுங் குனியமத வேள்முனியச்
சொல்லு மடநாணங் தோள்வளையு—மெல்லா

340 நடங்கொடுபோ கத்தாயர் நங்கையைக் கூட்டத்
துடன் கொடுபோ னார்மற் றொருத்தி—மடந்தை

## மடந்தை.

341 வருமளிகட் கல்லால் மதனுக்குங் காதம்
பரிமளிக்குங் கோமளப்பூம் பாவை—யெரிவிழிக்குக்

342 கூசு மதக்கடவுள் கோயிற் கிரதியிடும்
வீசு மணிவிளக்கா மெய்த்தோகை—தேசிகனை

343 யெள்ளும் பெரும்பாவ மெய்தினோன் வாகனமாய்க்
கொள்ளும் படிமுடித்த கூந்தலாள்—புள்வரைதன்

344 மெய்பார்க்க வேளூரின் மெய்த்தவஞ்செய் வோன்பதுமக்
கைபார்க்கப் பார்க்குமிரு கண்ணினாள்—ஐயோர்

345 கவலை யொழிப்பார் தமக்குநிழ லீந்த
துவலை கயனுங்குதலைச் சொல்லாள்—நவல்வணிகர்க்

346 கீந்ததென நமக்கு மீய நிதியிரண்டும்
போந்ததெனு முகத்தாள் பொற்கழுத்தாள்—பாந்தள்போல்

347 நான்ற சடையார் நடமிரண்டுங் கண்டோனை
யீன்ற பொருளா மிளமுலையாள்—ஆன்றபிராற்

348 காலயஞ்செய் செங்கண்ணா னந்தப் பிறப்பிழைத்த
றூலை யஞ்சுவிக்கு நுசுப்பினாள்—மேலொருநாள்

349 தோற்று நாகனுயிர் செற்றோன் றுயில்மேவி
யாற்றும் வயிற்றினா ளல்குலாள்—ஏற்றோன்

350 மதுர மொழிமறுத்து வந்து பூசித்தோ
ரெதிர வெருளு மியலாள்—கதிர்மருகில்

351 பாங்கியுந் தானும் பதஞ்செய்த சுண்ணத்தை
வாங்கி யிறைக்கும் வசந்தத்துத்—தாங்கள்

352 ஒருவர்க் கொருவ ருயர்ந்த தெனதென்
றிருவர்க்கு மாறுபிறந் திவ்வூர்த்—தெரிவையர்முன்

353 வென்றார்க்குத் தோற்றார் விடுதூது சொல்கவென
நின்றார்தங் காரளிக்கு நேரளிப்பச்—சென்றாங்கு

354 மான்சுண்ண மூண்டு மதுகரமெல் லாமிருளை
தேன்சுண்ண முண்ணாது சிந்துதலும்—தான்செறிந்து

355 தோற்றனையே தோழிநீ தூதுபோய்க் கீழ்வேளூர்
எற்றனையே கூட்டிங் கெனக்கென்றாள்—தோற்ற

356 நறையோதிக் காதலியு நந்தா தர விந்த
விறையோன் விரும்பா றெதுவோ—கறையரவ

357 மாடுந் திருச்செவிக்கீ ழுஞ்சாது தூதோதக்
கூடுந் துணிவெம்மாற் கூடுமோ—சூடுதுழா

358 யேறுபுறங் கண்டாரை யீரத் தலையிருப்பாள்
வேறுபுறம் போக விடுவாளோ—சீறுகிரி

359 வில்லி யயலாரை மேவ விடுத்திமய
வல்லி பிரிந்தாற்ற வல்லளோ—யல்லதெனின்

360 மாயோ னிளையாள் மலரடிக்கீழ்ச் சேடியர்நாம்
போயோதிற் சீற்றம் பொறுப்பரோ—பேயோடு

361 பூதகணம் பிணங்கப் பொங்குமவர் சந்நிதியில்
மாத ரணுக வசமாமோ—ஏதுசெய்கேன்

362 என்றிப் படிநினைக்கு மெல்லை யிலங்கைவனந்
துன்றிப் புவனந் தொழநின்றேன்—வென்றி

363 யுமையவள் கண்டத் தொருதிருநாண் பூட்டி
யிமையவர் வாழ்த்த விருந்தோன்—அமைசூல்

364 விளையுதாத் தூடு விரவாத தான்போய்க்
கிளையுதாத் தூடு கிடந்தான்—இளமா

365 வடுமருகு கட்டாவை வாசம்வர வாரூர்
நடுமருகு தேய நடந்தோன்—கடுகவே

366 மாகளமோர் கோடி மழைதிரண்ட தாம்பவனிக்
காகளமோர் கோடி கறங்குதலு—மோகையெழக்

367 கன்னியுந் தோழி கலைத்தலையை யீர்த்தோடித்
துன்னிய வாயுந் தொழத்தொழுவாள்—மின்னுங்

368 தவளக் குறுமுறுவல் தாமரையைக் கண்டாள்
பவளத் திருவுருவம் பார்த்தாள்—குவளை

369 களிகொள்ள வுள்ளங் களித்தா ளவன்றே
ளொளிகொள்ள நாண மொளித்தாள்—கிளிமொழியை

370 நோக்கார் மற்றொன்று நுவலா ரிலந்தைவனத்
தூக்கார் திருத்தேரைத் தூண்டினார்—மாக்கோதை

371 தோழியை யொட்டியவர் சொல்லலையோ வென்றலைப்ப
வாழிய மைகண் ணவரும்போய்—வேழம்

372 உரித்தாரே சிந்தூ னொருமுதுகு தண்டத்
தரித்தாரே கேடில்லா தாரே—நிருத்தத்தின்

373 உத்தமரே நீர்மின் னுலாவுஞ் சடையாரே
அத்தரே மெய்யடிமைக் காரரே—இத்தெருவிற்

374 கூறும் பழிக்கஞ்சீர் கூடற் பழிக்கஞ்சும்
பேறு முமக்கோ பிறர்க்கேயோ—சீரடிமை

375 யாய்க்கனியுங் காரைக்கா லம்மைக் கனியிலிவள்
வாய்க்கனியும் வேட்டொருக்கால் வாரீரோ—தூய்க்கடலி

376 னொண்மீன் விரும்பினீ ரோர்பாதன் பாலிவள்பாற்
கண்மீன் விரும்பினாற் கைப்பாமோ—பெண்மயிலின்

377 ஆணிப் பசுங்கனக வாடைத் துணியுமது
பாணித் துணியளவும் பற்றாதோ—வாணன்

378 முழாக்குடத்தி னண்பாநீர் முன்னுமிவற் கொங்கை
விழாக்குடத்தி னண்பு மிகீரோ—எழாத்துள்ளு

379 மம்மா னிடஞ்சேர்வீ ரிசை வலைசேர்ந்த
விம்மா னிடஞ்சேரி லீனமோ—செம்மாலை

380 தந்தணையா தேகத் தகாதென்று பின்சென்று
கொந்தணியும் வேணியரைக் கும்பிடவு—மெந்தைபிரான்

381 நில்லாது செல்ல நிகழ்த்தியது பாங்கிதனக்
கொல்லா தெனச்சொல்லி யூருங்கால்—வில்லாற்

382 செறுவிளைத்து மாரன் றிருக்கொம்புக் கம்புபோ
லுறுவிளைப்ப மற்றுங் கொருத்தி—யரிவை

## அரிவை.

383 காலப் புயலுங் கனிவாயின் மென்மொழியுங்
கோலத் தெழுமின் குழலானாள்—ஆலித்துப்

384 பொன்னித் துறையிற் பொருஞ்சேலு முத்துங்
கன்னித் திருத்தோளுந் துன்னினாள்—மன்னிய

385 தந்தமு மால்யானைத் தந்தமுஞ் சாற்றுங்கா
லந்தண் ணிடைமுலைக ளாயினாள்—நந்தா

386 திரங்கு கரங்காலு மிருவள்ளைத் தண்டு
மலங்கு பொலங்கு தையலானாள்—நலங்கெழுதேன்

387 வற்றாக் கமல மலருந் திருக்கழுத்து
முற்றாக் கனக முகமானாள்—கொற்றவரைப்

388 பாவைக் கொழுநர் பரிந்த திருப்பிறையுங்
கோவை யிதழுங் குளமானாள்—ஓவிய

389 மண்டபமு முத்து மணிவே திகைமீது
கண்டமுதச் சொல்லார் கணம்வணங்க—ஒண்டொடியு

390 மெய்தி யிருந்தொருதன் யாழ்மா டகமுறுக்கிச்
செய்து நரம்புத் திறமேற்றித்—தைவந்து

391 பூத்திரண்டு தேவர் பொழியத் தமிழ்முனிக்குக்
கூத்திரண்டு நல்குங் குலக்குன்று—தீர்த்தமெலாம்

392 கண்டு பரவக் கம்பன் றிருமகளாய்ப்
பண்டு வளைந்த பழநதியும்—வெண்டிங்கள்

393 பாரச் சடையவர்முன் பன்னீராட் டைக்கொருநாள்
நாரப் பகீரதியா நன்னாடுந்—தீரக்

394 கடையார் தரளக் கடனா கையினு
முடையார் தரித்திருந்த வூரும்—படையால்

395 எனைப்பிதா வென்னா தெறிந்து பூசித்த
தனையன் முடிக்கமருந் தாரும்—வினையைத்

396 துடைத்தோ னுருவைச் சுடருருளைத் தேரிற்
படைத்தோ னடாத்தும் பரியும்—அடுத்த

397 விருப்புச் சிலம்ப ரிரண்டா யிரம்வெண்
மருப்புச் சுவேத மதமாவும்—விருப்பில்

398 படியை யுழுது புறித்துண் ணுவணக்
கொடியை யுயர்த்த கொடியு—நெடுவே

399 யகடுபெறு சிறுவ ராடு மிடத்தண்ட
முகடு மதிரு முரசுந்—துகடீர்

400 நீளும் பதும னிருமித்த வையமுழு
தாளும் பெரியதிரு வாணையும்—வாள்விழியும்

401 பாடலு மாதர் பணிந்துருகிச் செந்திருவே
சூட லணங்கார்க் கமுதமே—பாடுமது

402 தீயோ டெதிருந் திருமேனி யானிருப்பை
மாயோ னிருப்பாக்கு மார்க்கமோ—தூயிசையால்

403 கும்பன் மலையங் குழைத்தநா ணீயிருந்தா
லம்பொன் னசலமெல்லா மல்லவோ—நம்பொரு*

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை

சோமசுந்தர தேசிகர்,

திருவாரூர்.

---

* இதுவரையிற்றான் கிடைத்திருக்கின்றது. முழுவதுமுள்ளார் ஏடுகொருதவுவாராயின் அவர்களது உபகாரத்தைப் பாராட்டுவதோடு நூலும் முடிந்து தனியே வெளிவருதற் கிடமுண்டு. சீர்தளைசிதைவும், பிழையும் திருத்தப் பட்டில.

திருநெல்வேலிஜில்லாக்கலெக்டர், ஸ்ரீமாந் A. M. C. G. C. குமாரசாமித்தம்புதுரையவர்கள், தென்காசித்தாலூகாக்கச்சேரியில் 1926-ம் ஞ மேமீ ' டயில் தர்பார் கூட்டி, பென்ஷன் வெற்றெறிநெறி சூப்ரின்றென்றும், மாஜி—திருநெல்வேலித் தாலூகாபோர்டு பிரஸிடென்றும், தென்காசி பெஞ்சுகோர்ட் பிரஸிடென்றும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்தியாசபை அங்கத்தினருமாகிய ஆங்கிலதிராவிடபண்டித ஸ்ரீ வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்களுக்கு ராவ்ஸாஹிப் ஸங்கதும் பதக்கமுமளித்துக் கௌரவித்த வைபவங்கண்டு மகிழ்மீக்கூர்ந்து திருநெல்வேலி இந்துகாலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் மே. சோ. சுப்பிரமணியக்கவிராஜரியற்றிய வாழ்த்துப்பாக்கள்.

பூவலயந் தன்னிலிரு வேறுலகத் தியற்கையெனப்
புகன்ற பொய்யில்
நாவலவன் சொற்கெதிரா விருவகையா கியசெல்வ
நண்ணி மேலாம்
பாவலவ ருண்மையொடு தனைப்புகழ வவர்ப்புகழ்ந்து
பரிந்து சால
வாவலொடு மிருவகைச்செல் வங்களையு மினிதுதவி
யானந் திப்போன். (1)

நித்தியமே யகடவுள் திருவடிகண் மறவாத
நேய மிக்கோன்
உத்தமமா கியகல்வி யறிவொழுக்கங் களிற்சிறந்திவ்
வுலக வாவி
மெத்தியமா வயித்தியத்திவ் விராஜ்தானித்தலைமை
மேவிப் பின்னர்ப்
புத்தகஙாப் பண்ணிருந்தாய்ந் தாங்கிலநூல் தமிழ்நூலின்
போகந் துய்ப்போன். (2)

ஆய்ந்தபல வாங்கிலநூற் கருத்தினையுந் தமிழ்நூலி
னமைந்த பொற்பி
னேய்ந்தபல கருத்தினையு மியைந்துவரு கற்பனைக
ளிணையின் றாக

வாய்ந்தவக விகைவெண்பாத் தமிழறிஞ ராங்கிலர்கள்
வாசித் தின்பந்

தோய்ந்துவகை கொளச்செய்து வித்துவசி ரோமணியாத்
துலங்கி வாழ்வோன். (3)

நெல்லைநகர்ச் சிலேடைவெண்பா முதலான சொல்லணிக
ணிரம்பு நூல்கள்

இல்லைநிக ரெனச்செய்தோன் கம்பரா மாயணத்தி
னினிமை மேய

சொல்லரிய பாக்களினுண் பொருளாய்ந்து தான்மகிழ்ந்
துய்த்த.வின்ப

மல்லவுல கின்பமுறப் பரப்பிவரு கற்றறிந்த
வண்மை யாளன். (4)

ஆங்கிலநூ லாய்ந்தவற்றைத் தமிழின் மொழி பெயர்த்தின்ப
மடையச் செய்தோன்

பாங்கதனு லாங்கிலமா கவிதான்கற் பனையதெனப்
பகரு வோருக்

கீங்கிதன்மே லிலையெனுந்தண் டமிழ்நூற்கற் பனைகளெடுத்
தியம்பி யன்னூர்

ஒங்குதமிழ் மேலெனச்செய் வோனறிஞர் தன்பால்வந்
துறுவா ரென்னில். (5)

அன்னவருக் குபசார மமையச்செய் தவர் தம்மோ
டாய்ந்து பன்னூல்

சொன்னபல வுட்பொருளுந் துணிந்தறிந்து மகிழ்ந்திருந்து
துன்னு மன்னூர்

உன்னிவரு காரியந்தஞ் செயலுறவோ ரெலாமறந்துற்
றுறையச் செய்வோன்

புன்னரிய பரோபகா ரச்செயலே யனுதினஞ் செய்
பான்மை யோனே. (6)

சீரணிய பலவளஞ்சேர் வெள்ளக்கா லெனும்பதியிற்
சிறந்து வாழ்வோன்

ஊருணியின் றகைமையென வுதவிமகிழ் பெருஞ்செல்வ
முள்ள வுள்ளக்

காருணியன் பழநியப்ப வேள்புரிந்த தவத்துதித்த
காதன் மைந்தன்
ஞாணிமெச் சியபுகழ்சேர் சுப்பிரம ணியபெரிய
தகைமை யோற்கே. (7)

வேறு.

கருணைகூ ரைந்தாம் ஜார்ஜெனும் பெயர்கொள்
காவலன் மிடியெனக் கழறும்
இருளுறு விங்கி லாந்தினுக் கிறையா
மிந்திய சக்கர வர்த்தி
நிருபனார் நேர்பி ரதி நிதி யாக
ரீடிங்குப் பிரபுநன் களித்த
அரியராவ் ஸாஹிப் பட்டமன் னதினை
யதன்பதக் கத்தினை மாதோ. (8)

ஞாயவான் திருநெல் வேலியில் ஜில்லாக்
கலெக்டரா நண்ணிய சீமான்
ஏ. யம். ஸீ. ஜீ. ஸி. தம்பு கு மார
சாமியா மெம்மனோர் முதல்வன்
மேயசீ ருறுதென் காசியிற் றருபா
ரெனப்பெயர் விளங்குமா சபையில்
நேயமா வெவரும் புகழ்ந்துவாழ்த் தெடுப்ப
நீடிய மகிழ்வொடீந் தனனே. (9)

௬

பெருமைய தாம்ராவ் ஸாஹிபாம் பட்டம்
பெட்பொடு பெரிதுவந் தினிது
தருமிறை பிரதி நிதியொடு கலெக்டர்
தங்களை வாழ்த்தியப் பட்டம்
அருமையிற் பெற்ற சுப்பிர மணிய
ஆண்டகைக் கரும்பெரும் புகழைத்
திருவுட னருள வொருபரம் பொருளைத்
திருவடி தொழுதிடு வோமே. (10)